# திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# 2021-12-05

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் பாரூக்கு நூலிலிருந்து வாசகம்* 5: 1-9 ,

*திருப்பாடல்* 126: 1-2 4-5. 6,

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 1: 4-6, 8-11,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 3: 1-6 )

## *திருப்பலி முன்னுரை:*

*நன்மைக்குரியவர்களே, திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். கிறிஸ்துவின் வருகைக்காக தயாரிக்கும் நாம், இன்று திருமுழுக்கு யோவானின் அழைப்பை சிந்திக்க அழைக்கப்படுகிறோம். நம் பாவங்களுக்கு மன்னிப்பு பெறும் வகையில், மனம்மாற வேண்டுமென யோவான் நமக்கு அழைப்பு விடுக்கிறார். ஆண்டவருக்காக வழியை ஆயத்தம் செய்யும் வகையில், கோணலானவை அனைத்தும் நேராக்கப்பட வேண்டும். ஆண்டவர் முன்னிலையில் தூயவராக நிற்குமாறு, நமது சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி வாழ இன்றைய திரு வழிபாடு நம்மை அழைக்கிறது. ஆண்டவருக்காக நமது பாதையைச் செம்மையாக்கும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***புனிதம் நிறைந்தவராம் இறைவா,***

*உமது திருமகனின் வருகைக்காக உமக்காக வழியை ஆயத்தம் செய்பவர்களாக வாழும் வரத்தை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் நிறைவாகப் பொழிந்து, புனிதத்தில் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***நீதி நிறைந்தவராம் இறைவா,***

*மக்களிடையே இரக்கமும், நீதியும், அன்புடன் கூடிய நற்செயல்களும் பெருக உழைக்கும் நல்ல மனதினை உலக நாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***இரக்கம் நிறைந்தவராம் இறைவா,***

*அன்பு, நீதி, இரக்கம் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகளால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கும் மக்கள் மீது பரிவு கொண்டு, அவர்களது வேதனை நீங்க உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வாக்குமாறாத தெய்வமே!***

*பல்வேறு தேவைகளுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் தாம் எதிர்நோக்கி காத்திருக்கும் காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வாக்குமாறாத தெய்வமாகிய உம்மேல் இன்னும் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக, தன் விசுவாச வாழ்வை புதுப்பித்துக் கொள்ளும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***எமக்கு இரங்கும் தாவீதின் மகனே, எம் இறைவா!***

*தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுதலைப் பெறவும், வருங்காலத்தில் எம் சந்ததினர் நற்சுகமும், மனபலமும், பொருளாதார வளர்ச்சியும் பெற்று இவ்வுலகில் உமது செய்வீரர்களாய் பணிசெய்திட அவர்களுக்கு ஞானத்தையும், திடமான நம்பிக்கையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்லும் தந்தையே இறைவா!***

*வரும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் முன் தயாரிப்புகளை நாங்கள் வெறும், வெற்று வெளி அடையளங்களை மையப்படுத்தி வாழாமல் ஆன்மீகத் தயாரிப்புகளில் எங்களைப் புதுப்பித்துக் கொண்டு, உம் பிறப்பு ஏழைகளுக்கு நற்செய்தியாக அமைந்தது போல நாங்களும் நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நீதியின் ஒளியே எம் இறைவா!***

*விசுவாசத்தில் நிலைத்திருக்கும் அனைவரும் இயேசுவின் உயிர்ப்பில் பங்குபெறுவர் என்று உணர்த்திய இறைவா! இறந்த விசுவாசிகளாகிய எங்கள் உறவினர்கள், நண்பர்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள் உமது நித்தய பேரின்பத்தை அடைந்து மகிழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அளவற்ற அன்புக்கு அடித்தளமான இறைவா!***

*மழையினால் பாதிக்கப்பட்ட எல்லாக் கிராமங்களிலும் பொருள் சேதம், மன உளச்சல், வேதனைகள், உயிர் சேதம் இவற்றின் விளைவாக வாழ்வையே இழந்துத் தவிக்கும் எம் சகோதர சகோதரிகளின் துயர்துடைக்க உம் கரம் பற்றிடத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*